வழக்கு எண். MCOP. No.64/2023

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13 ஆம் தேதி எ.ம.சா.1 வாக்குமூலம் உறுதிமொழிச்சட்டம் 44/1969 பிரிவு 4 ஏற்பாட்டின் படி திரு. S. சக்திவேல், முதல்நிலை உதவியாளர், சிறப்பு மாவட்ட நீதிமன்றம், ஈரோடு என்பவரால் பிரமாணம் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அஜீத் | கிராமம் | : |
| த/பெ | : | மாவட்டம் | : |
| வயது | : | தொழில் | : |

முதல் விசாரணை :

நான் எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தைத் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதை நான் படித்துப் பார்த்து தான் கையொப்பம் செய்தேன். அதை என்னுடைய சாட்சியத்தின் ஒரு அங்கமாகப் பாவிக்க வேண்டுகிறேன்.

எ.ம.த.சா.ஆ.1 பாலிசி – நகல்

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:

எ.ம.சா.1 காப்பீடு பாலிசி கோவை பிரிவு அலுவலகத்தில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மனுதாரர் தரப்பிலிருந்து

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED170010792022/truecopy/order-3.pdf

www.ecourtsindia.com

கோவை பிரிவு அலுவலகத்திற்கு 22.12.2022ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் தெரியாது. நான் சென்னை அலுவலகத்தில் பணிபுரிவதால் கோவை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட அந்த அறிவிப்பு பற்றி என்னால் சொல்ல முடியாது என்றால் சரியல்ல. தொடர்பு முகவரி கோவை பிரிவு அலுவலகத்தின் முகவரியாக எ.ம.சா.1ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பிரிவு அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர் வந்தால்தான் அந்த பாலிசி சம்மந்தமாக வந்த கடிதங்கள் பற்றி சொல்ல முடியும் என்றால் சரியல்ல. OD, PA Coverage மற்றும் Third Party ஆகியவற்றிற்கு சேர்த்து முதலாண்டில் கொடுக்கப்படும் பாலிசி Bundle பாலிசி எனப்படும். எ.ம.சா.1 காப்பீடு பாலிசி முதலாண்டிற்கு மட்டும் செல்லும் என்றும் எ.ம.சா.1ல் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. கோவை அலுவலகத்தில் வழங்கப்பட்ட எ.ம.சா.1 பாலிசி பற்றி சென்னை அலுவ லகத்திலிருந்து வந்து சாட்சியம் அளிக்க எனக்கு அதிகார கடிதம் வழங்கப்பட்டதா என்றால் ஈரோடு மாவட்டத்திற்கான மேலாளார் நான்தான் என்பதால் இந்த பாலிசி பற்றி சாட்சியம் அளிக்க தகுதி உண்டு. சென்னை அலுவலகத்தில் பணிபுரிவதாகத்தான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேன் என்றும் ஈரோடு மாவட்டத்தைப் பற்றி பிரமாண வாக்குமூலத்தில் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். எ.ம.சா.1 அனைவருக்கும் பொருந்தக்கூடியது என்றும் அது குறிப்பாக யாருக்கு

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED170010792022/truecopy/order-3.pdf

பொருந்தக்கூடியது என்று அதில் குறிப்பிடப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அந்த பாலிசி வழங்கப்பட்டபோது நான் அதில் நேரடியாக சம்மந்தப்பட்டிருக்கவில்லை என்றால் சரிதான். அந்த பாலிசியை வழங்கிய ஊழியரை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இந்த பாலிசியின் தன்மை பற்றி அதை வழங்கிய நிறுவன ஊழியர் வாகன உரிமையாளரிடம் விளக்கவில்லை என்றால் சரியல்ல. அதனை அவர் விளக்கினார் என்பதற்கு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை. அவர் எந்த மாதிரி அதனை விளக்கினார் என்பது பற்றி என்னுடைய சாட்சியத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பாதிக்கப்பட்ட நபரை எங்கள் நிறுவனத்தின் புலன் விசாரணை அலுவலர் சந்தித்து பேசினாரா என்று தெரியாது. விபத்து தொடர்பான முதல் தகவல் அறிக்கையை நான் பார்த்திருக்கிறேன். எ.ம.சா.1 காப்பீடு பாலிசி காப்பீடு வாகனத்தின் பின்னால் உட்கார்ந்து செல்லும் நபருக்கு பொருந்தக்கூடியது அல்ல என்பதை காட்டக்கூடிய சான்றாவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த மனுதாரருக்கு அந்த பாலிசியின் அடிப்படையில் இழப்பீடு பெற தகுதியுள்ளவர் என்றால் சரியல்ல. எ.ம.சா.1 பாலிசி அந்த வண்டியின் பின்னால் உட்கார்ந்து செல்லக்கூடிய நபருக்கும் பொருந்தும் என்றால் அந்த பாலிசி வழங்கப்பட்ட தேதியிலிருந்து 1 வருடத்திற்கு மட்டும்தான் அது பின்னால் உட்கார்ந்து செல்லக்கூடிய நபருக்கும் பொருந்தும். அந்த காப்பீடு பாலிசி வழங்கப்பட்ட விதம் பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED170010792022/truecopy/order-3.pdf

www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com

என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை</u>:

இல்லை.



This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED170010792022/truecopy/order-3.pdf